வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 256/2021

வழக்கு சாட்சி PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர்,<br><br>சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>பொன்னேரி காவல்<br>நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | காத்தவராயன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 58 |

தேதி 28.10.2024

எதிரி ஆஜர்

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பொன்னேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2019 ஆம் ஆண்டு நான் புழல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். 20.09.2019 தேதி 13.00 மணி முதல் 21.00 மணி வரை இரவு ரோந்து, மதியம் பணியில் விநாயகபுரம் பகுதியில் பணியமர்த்தப்பட்டேன். இரவு 8.25 மணியளவில் தலைமை காவலர் சோனைமுத்து தொலைபேசியில் என்னிடம் எண். 28 நேரு தெரு, கல்பாளையம், விநாயகபுரம் வருமாறு கூறினார். நான் செக்டார் இரண்டிலிருந்தும், சுரேஷ்குமாரும் ஜிப்ஸி 2வில் இருந்தவரும் நேராக சோனைமுத்து கூறிய பகுதிக்கு சென்றோம். அவரை பார்த்தபோது அவரது சட்டையும், பெயர் பேட்ச் இருக்கின்ற பகுதி கிழிந்து நின்றுகொண்டிருந்தார். பாரா காவல் நிலையம் என்னை விசாரணை செய்வதற்கு சம்பவ இடத்திற்கு வர கூறியதாகவும், அப்போது வந்தபோது சோனைமுத்து அங்கு இருந்த ஒரு நபர் உன்னை யாருடா

வரசொன்ன. எஸ்.ஐ வரவில்லையா. உன்பெயர் என்ன என்று சோனைமுத்து பெயர் பேட்ச்சை சட்டையிலிருந்து இழுத்துபார்த்து கிழித்துவிட்டதாகவும், பின்னர் சோனைமுத்துவை காலால் எட்டி உதைத்ததில் சோனைமுத்துவிற்கு இடது முட்டியில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் இந்த தெருவில் எந்த போலீஸ் தெவிடியா பையலும் வரகூடாது என மிரட்டி மீண்டும் எட்டி உதைத்ததில் இடது பக்க சுண்டுவிரலில் வீக்க காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் அந்த நபர் வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து மிரட்டியதாகவும் கூறினார். நானும், சுரேஷ்குமாரும் உள்ளே சென்று தேடிபார்த்தபோது அந்த நபர் அங்கு இல்லை எனவும், பின்னர் சோனைமுத்துவை நிலையம் நாங்கள் அழைத்து சென்றோம். அங்கிருந்த எஸ்.ஐயிடம் நடந்ததை சொன்னார். எஸ்.ஐ நடந்ததை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

பணியில் இருந்ததை பணிபதிவு பதிந்து வைக்கப்பட்டுள்ளதா என்றால் பணிபதிவும், Duty roasterரும் பதிந்து வைத்திருக்கும். நாங்கள் எந்த பணிக்கு செல்கிறோம் என்பதற்கு குறிப்பு எழுதி செல்வோமா என்றால் அன்று நானும் ரோந்து பணியில்தான் இருந்தேன். சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால் ஆமாம். நான் செல்லும்போது எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்து முடிந்த பின்பு தான் சென்றோம் என்றால் ஆமாம். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததில்லை என்றால் ஆமாம். புகார்தாரர் என்ன கூறினாரோ அதைதான் நான் கூறுகிறேன் என்றால் நான் விசாரித்தபோது நான் கூறியதுதான் அவர் கூறியது. எனக்கு சம்பவத்தைபற்றி எதுவும் நேரடியாக தெரியாது என்றாலும் புகார் கொடுத்தவர் எங்களுடன் பணிபுரிபவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் ஜோடனை செய்து எதிரிக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. போலீசார் வேறு யாரும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**